# யாகங்களை நடத்தும் கன்னிப் பெண்கள்

சாந்திப்பிரியா

(மே, 2008 ஆம் ஆண்டு கும்பம் என்ற இதழில் வெளியான கதையின் மாற்றி அமைக்கப்பட்ட கதை இது )



அன்னை கோதாவரி மா

நாம் பெண் சாத்விக்களைப் பற்றி அதிகம் அறிந்திருக்க மாட்டோம். ஆனால் அங்கும் இங்குமாக சில அற்புதமான ஆற்றலைப் பெற்ற பெண் சாதகக்கள் இருந்துள்ளனர். அந்த வகையில் நமக்கு தெரிந்த ஒருவரே கோதாவரி அன்னை. 1914 ஆம் ஆண்டில் மகராஷ்டிராவில் ஷேகாவூன் என்ற இடத்தில் பிறந்த அந்த அன்னையின் பெயர் கோதாவரி. அவருக்குப் ஒன்பது அல்லது பத்து வயதான பொழுது அவருடைய கனவில் உபாசினி மகராஜ் தோன்றி அவளைத் தன்னைக் காண வரும்படி அழைத்தாராம். ஆகவே அவர் தன்னுடைய தாயாருடன் மகராஷ்டிரத்தில் இருந்த அஹமத் மாவட்டத்தில் உள்ள சகோரி என்ற இடத்திற்கு அவரைக் காண யாத்திரை சென்றாள்.

சாகோரி எனும் அந்த ஊர் ஷீரடியில் இருந்து ஐந்து கிலோ மீடர் தொலைவில் உள்ளது. அவருடைய தாயார் சாயி பாபா பக்தர். உபாசினி மகராஜ் அந்த காலத்தில் சாயிநாதரின் சிஷ்யராக இருந்தார். அவர் சித்த புருஷர் எனப் பெயர் பெற்றவர். 1870 ஆண்டில் பிறந்த அவரை 1913 ஆண்டில் சீரடி சாயிபாபா பெருமையாகப் போற்றி தன்னைப் போலலே அவரையும் அனைவரும் சென்று வணங்க வேண்டும் என தன்னுடைய பக்தர்களிடம் கூறி வந்தார். மகராஷ்டிரத்தில் இருந்த அஹமத் மாவட்டத்தில் உள்ள சகோரியில் உபாஸினி மகராஜ் தங்கி இருந்தார். மற்ற சாதுக்களைப் போல் அல்லாமல் மிகவும் வித்யாசமாக இருந்தவர்.எந்த நேரத்தில் என்ன செய்வார் எனத் தெரியாதாம். அந்த காலங்களில் பெண்களுக்கு பொது வாழ்வில் சுதந்திரம் கிடையாது. அதை உடைக்கும் விதத்தில் முதலில் தன்னிடம் வந்த பத்து வயது கோதாவரிக்கு மாலை அணிவித்து தனது பக்தையாக மாற்றிக் கொண்டார். அவருடைய தீவீரமான பக்தையாக மாறிய கோதாவரிக்கு அவளுடைய வயது பதினெட்டாக ஆன பொழுது அவளை தன்னுடைய ஆசிரமத்திற்கு வரவழித்தார். 1928 ஆம் ஆண்டு அங்கு வந்தவளை கற்பக்கிரகத்திற்கு அழைத்துச் சென்று தன்னுடைய கழுத்தில் இருந்த மாலையைக் கயற்றி அவளுடைய கழுத்தில் அணிவித்து விட்டு அவளுக்கு மந்திரோபதேசம் செய்தார். அனைவரிடமும் அவள் முன் பிறவியில் மாபெரும் முனிவராக இருந்ததினால்தான் இந்தப் பிறவியில் தன்னுடைய சிஷ்யையாக மாறி மக்களுக்குத் தொண்டு செய்ய வந்திருப்பதாகக் கூறினார். அவளே பின்னர் கோதாவரி மா அதாவது கோதாவரி அன்னை என அன்புடன் அனைவரினாலும் அழைக்கப்படலானாள். பலராது எதிர்பையும் மீறி உபாஸினி மகராஜ் கன்யா குமாரி ஸ்தான் அதாவது திருமணமாகாத இளம் பெண்களின் அடைக்கல ஆசிரமம் என்ற ஒன்றை நிறுவி, அதில் பெண்களுக்கு சமிஸ்கிருத மொழி கற்றுத் தந்து பூஜைகள் செய்யவும் கற்றுத் தந்தார். அந்த ஆசிரமத்தில் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களை பிரதிஷ்டை செய்தார். உபாஸினி மகராஜ் சமாதி அடைந்தப் பின் மடத்தின் பொறுப்பை ஏற்று அதை நிர்வாகித்தார் அன்னை கோதாவரி மா. அந்த ஆசிரமத்தின் பொறுப்பை அன்னை கோதாவரி ஏற்ற பொழுது அவருடைய வயது முப்பதுக்கும் குறைவாகவே இருந்ததாம். அந்த அன்னையின் முயற்சியால் உபாஸினி மகராஜ் சமாதி அந்த ஆசிரமத்திற்கு உள்ளேயே எழுப்பப்பட்டதாம். அவர் அந்த ஆசிரமத்தில் பல்வேறு காரணங்களினால் வந்து சேர்ந்த பல இளம் பெண்களுக்கு மந்திர தீட்சைத் தந்து , தினமும் அவர்கள் கடை பிடிக்க வேண்டிய பூஜை விதிமுறைகளைக் கற்றுத் தந்து வந்தார். காலை ஐந்து மணிக்கு எழுந்தப் பின் சுமார் நான்கு மணி நேரம்

மௌனம் அனுஷ்டித்தபடி, ஆலயத்தின் வேலைகள், ஆசிரமத்தின் வேலைகள், உணவு தயாரித்தல், தத்தம் உடைகளை வெளுப்பது போன்றவற்றை செய்த பின் அந்த கன்னிகைகள் தினமும் பல்வேறு பூஜைகள். ஆன்மீக சொற்பொழிவுகள் போன்றவற்றை செய்தும், யாகங்கள் போன்றவற்றை செய்தும் ஆன்மீக வழிபாட்டில் இணைந்து உள்ளனர். அந்த ஆசிரமத்தின் மிக ஆச்சரியமான விஷயமே யாகங்கள் அனைத்தையும் மந்திர உச்சாடனங்களை பிழை இன்றீ ஓதி, பெண்களே செய்வதுதான். அந்த கன்னிகா ஸ்திரீக்களுக்கு எந்த விதமான நகைகளோ, நாகரீக உடைகளோ அல்லது மற்ற லொளகீகப் பொருட்களோ உபயோகிக்க அனுமதி இல்லை. அத்தனை மனக் கட்டுப்பாட்டைப் பெற்று வாழ்ந்து கொண்டு இருக்கும் அவர்கள் அனைவரையும் அப்படிப்பட்ட நல்ல காரியத்தில் வழி நடத்திச் செல்பவர் அன்னை கோதாவரி அவர்கள்தான்.